**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 விசுவாவசு வருடம், வைகாசி மாதம் 29–ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**பழைய <u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 19/2018</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 100/2021</u>**

**<u>CNR.NO. TNKR11-000109-2021</u>**

**தமிழக அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
**மாயனூர் காவல் நிலையம்,**
**குற்ற எண்.306/2017**
**சட்டபிரிவுகள் : 379 IPC** --- புகார்தாரர்

// எதிர்//

**சிவசுப்பிரமணியன்,**
**த/பெ. மருதைவீரன்,**
**பகவதி அம்மன் கோவில் தெரு,**
**திருக்காம்புலியூர்,**
**கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,**
**கரூர் மாவட்டம்.** --- குற்றம்சாட்டப்பட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 12.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.100/2021,<br>CNR No.TNKR11-000109-2021 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>Mayanoor P.S.<br>/Vs/<br>Sivasubramaniyan |
| 6. | Date of Occurrence | 19.09.2017 |
| 7. | Date of Complaint | 24.09.2017 |
| 8. | Date of Arrest if any and Remand | 1$^{st}$ Remand – 25.09.2017<br>2$^{nd}$ Remand – 29.10.2025 |
| 9. | Period of remand of the accused | 1$^{st}$ Remand – 25.09.2017 - 09.11.2017 |

<table>
<tr><td></td><td></td><td colspan="3">2nd Remand – 29.10.2025 to Till date custody</td></tr>
<tr><td>10.</td><td>Date of Release on bail</td><td colspan="3">1st Release – 09.11.2017<br>2nd - Till date custody</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final report</td><td colspan="3">26.10.2017</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Session</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>13.</td><td>Date of questioning of the accused U/s. 240 CRPC</td><td colspan="3">05.09.2023</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of examination in Chief and Cross examination of the witness</td><td>No. of. Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW-1<br>PW-2<br>PW-3<br>PW-4<br>PW-5</td><td>17.11.2025<br>17.11.2025<br>17.11.2025<br>27.03.2026<br>08.05.2026</td><td>17.11.2025<br>17.11.2025<br>17.11.2025<br>27.03.2026<br>08.05.2026</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>16</td><td>Date of examination of the accused U/s. 313 of the Code</td><td colspan="3">14.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td colspan="3">03.10.2022 to 30.08.2023<br>09.10.2023 to 29.12.2023<br>10.09.2024 to 29.10.2025</td></tr>
<tr><td>18.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td colspan="3">17.11.2025</td></tr>
<tr><td>20.</td><td>Date of closure of Trial</td><td colspan="3">08.05.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence or order</td><td colspan="3">12.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of service of copy of judgment to the accused</td><td colspan="3">12.06.2026</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give explanation</td><td colspan="3">No</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 30.05.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 12.06.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>மாயனூர் கா. நி. கு. எண். 306/2017 |
| எதிரியின் பெயர் | சிவசுப்பிரமணியன்,<br>த/பெ. மருதைவீரன்,<br>பகவதி அம்மன் கோவில் தெரு,<br>திருக்காம்புலியூர்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 379 IPC |
| எதிரியின் பதில் | குற்றவாளிஅல்ல |
| நீதிபதியின் முடிவு | இதச பிரிவு 379 ன் படி குற்றவாளி |
| அரசு குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.S.செல்வக்குமார் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 30.05.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 12.06.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது மாயனூர் காவல் நிலையம், காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173 –இன் கீழ் 24.09.2017 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு 379 ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.II நீதிமன்றத்தில் சி.சி.எண் 19/2018 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையறை அடிப்படையில் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம் ROC.No.10/2021/A1, 27.01.2021 என்ற உத்தரவின்படி

இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண்.100/2021 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**இறுதியறிக்கையின் சுருக்கம்:**

கடந்த 19.09.2017 ம் தேதி காலை 08.00 மணியளவில் மாயனூர் தண்ணீர்பாலம் அருகே செல்லாண்டியம்மன் கோவில் செல்லும் வழியில் அ.சா.1 க்கு சொந்தமான TN–47–AU–9156 என்ற பதிவு எண் உள்ள ஹீரோ பேஷன் புரோ என்ற இருசக்கர வாகனத்தை சாமி கும்பிட செல்வதற்காக நிறுத்திவிட்டு சென்று பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது எதிரியான சிவசுப்பிரமணியன் என்பவர் அ.சா.1 க்கு தெரியாமல் அ.சா.1 க்கு சொந்தமான சுமார் ஐம்பதாயிரம் மதிப்புள்ள TN–47–AU–9156 என்ற பதிவு எண் உள்ள ஹீரோ பேஷன் புரோ என்ற இருசக்கர வாகனத்தை திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் திருடிய குற்றத்தை புரிந்துள்ளார். எனவே, மேற்படி எதிரியின் செய்கையானது ச/பி 379 ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** மாயனூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரியின் மீது கு.வி.மு.ச.பிரிவு 173 ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 379 – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தங்கள் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**4)** இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 8 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 2, 4 முதல் 6 விசாரிக்காமல் Dispence

செய்யப்பட்டுள்ளார்கள். எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>

**5.1)** அ.சா.1. பிரபாகரன் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர். 19.09.2017 ம் தேதி காலை 08.00 மணிக்கு குடும்பத்துடன் அ.சா.1 ன் இருசக்கர வாகனமான Fashion Pro TN 47 AU 9156 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நிறுத்திவிட்டு சாமிகும்பிட்டு விட்டு வந்து 08.30 மணியளவில் பார்த்தபோது அ.சா.1 ன் இருசக்கர வாகனம் காணவில்லை. தேடிப்பார்த்தார் கிடைக்கவில்லை. குடும்பத்தில் உள்ளவர்களிடம் கேட்டுவிட்டு புகார் கொடுத்தார். அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார் அ.சா.1 கொடுத்ததுதான் அதிலுள்ள கையொப்பம் அ.சா.1 உடையது தான். 25.09.2017 அ.சா.1 ன் வண்டியை போலிசார் கண்டுபிடித்தார்கள். அ.சா.1 ன் வாகனத்தை போலிசாரிடம் அடையாளம் காட்டினார். போலிசார் அ.சா.1 ன் வாகனத்தை ஆஜர் எதிரி சிவசுப்பிரமணியம் திருடியதாக சொன்னார்கள். அ.சா.1 ன் வாகனத்தை நீதிமன்றத்தில் மனு செய்து வாங்கிச்சென்றுவிட்டார். அ.சா.1 யிடம் காட்டப்படும் 3 புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் அ.சா.1 உடையது தான் என சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2)** அ.சா.4 திரு.முகமது ஜாபர் காவல் உதவி ஆய்வாளர் கடந்த 24.09.2017 ம் தேதி அன்று காலை 07.00 மணிக்கு மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பிரபாகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று மாயனூர் காவல் நிலைய குற்ற எண்.306/2017 சட்டப்பிரிவு 379 இதச பிரிவின் படி வழக்கு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னிட்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளையராஜா, விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

**5.3)** சாட்சிகள் பிரபாகரன், தர்மலிங்கம், பிரகாஷ், இளையராஜா, விஸ்வநாதன், தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். 25.09.2017 ம் தேதி பகல் 09.00 மணிக்கு மணவாசி முடக்குசாலை வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது கருப்பு நிற பதிவு எண் இல்லாத பேசன் புரோ இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தவர் அ.சா.4 ஐ பார்த்தவுடன் தப்பிக்க முயற்சித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாரத், தியகாராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். வழக்கில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தையும், எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 379 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 14.05.2026 ஆம் தேதி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்.

7) இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரியின் மீது இதச பிரிவுகள்** 379 இதசவின் கீழ் **வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**<u>8) அரசு தரப்பு வாதம் :—</u>**

அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை – 1 அவர்கள் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் அ.சா.1 ன் வாகனம் திருடுபோனது பற்றி தெளிவாகவும், நம்பும்படியும், ஏற்கும்படியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், புகார் திருடுபோனது உறுதி செய்கிறது என்றும், திருடுபோன இருசக்கர வாகனம் எதிரியிடமிருந்து தான் மீட்கப்பட்டது என்று அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகள் நம்பும்படியும், ஏற்கும்படியும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், மேற்படி சாட்சிய வாக்குமூலங்களையும், ஆவணங்களையும் படித்து காண்பித்து எதிரி தான் திருடிய நபர் என்றும், எதிரிக்கு அதிகப்படியான தண்டனை வழங்கும்படியும் வாதிட்டார்.

**9) எதிரி தரப்பு வாதம்:–**

வழக்கு காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றும், அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகள் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி நபர்களின் சாட்சியத்தை ஏற்க கூடாது என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கவில்லை என்றும், எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**10) தீர்வு.**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 19.09.2017 ம் தேதி காலை 08.00 மணியளவில் மாயனூர் தண்ணீர்பாலம் அருகே செல்லாண்டியம்மன் கோவில் செல்லும் வழியில் அ.சா.1 க்கு சொந்தமான TN–47–AU–9156 என்ற பதிவு எண் உள்ள ஹீரோ பேஷன் புரோ என்ற இருசக்கர வாகனத்தை சாமி கும்பிட செல்வதற்காக நிறுத்திவிட்டு சென்று பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது எதிரியான சிவசுப்பிரமணியன் என்பவர் அ.சா.1 க்கு தெரியாமல் அ.சா.1 க்கு சொந்தமான சுமார் ஐம்பதாயிரம் மதிப்புள்ள TN–47–AU–9156 என்ற பதிவு எண் உள்ள ஹீரோ பேஷன் புரோ என்ற இருசக்கர வாகனத்தை திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் திருடிய குற்றத்தை புரிந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10.1)** அ.சா.1 பிரபாகரன் புகார்தாரர், தனது சாட்சியத்தில் 19.09.2017 ம் தேதி காலை 08.00 மணிக்கு குடும்பத்துடன் அ.சா.1 ன் இருசக்கர வாகனமான Fashion Pro TN 47 AU 9156 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நிறுத்திவிட்டு சாமிகும்பிட்டு விட்டு வந்து 08.30 மணியளவில் பார்த்தபோது அ.சா.1 ன் இருசக்கர வாகனம் காணவில்லை என்றும், தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை என்றும், குடும்பத்தில் உள்ளவர்களிடம் கேட்டுவிட்டு புகார் கொடுத்தார் என்றும், அ.சா.1 யிடம் காட்டப்படும் புகார் அ.சா.1 கொடுத்ததுதான் அதிலுள்ள கையொப்பம் அ.சா.1 உடையது தான் என்றும், 25.09.2017 அ.சா.1 ன் வண்டியை போலிசார் கண்டுபிடித்தார்கள் என்றும் அ.சா.1 ன் வாகனத்தை போலிசாரிடம் அடையாளம் காட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.2)** அ.சா.2 தனது சாட்சியத்தில், 25.09.2017 ம் தேதி காலை 10.00 மணிக்கு செல்லாண்டியம்மன் கோவிலுக்கு அ.சா.2 ன் அண்ணன் இருசக்கர வாகனமான Fashion Pro TN 47 AU 9156 என்ற வாகனம் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நிறுத்திவிட்டு சாமிகும்பிட்டு விட்டு வந்து இரண்டு மணிநேரம் கழித்து வந்து பார்த்தபோது அ.சா.2 ன் அண்ணன் இருசக்கர வாகனம் காணவில்லை. தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. 3 நாட்கள் கழித்து எனது அண்ணன் புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.3)** அ.சா.ஆ–1 புகார் மேற்படி ஆவணத்தை உற்று நோக்கும் போது கடந்த 19.09.2017 ம் தேதி காலை அ.சா.1 க்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை செல்லாண்டியம்மன் கோவிலுக்கு சாமி குப்பிடுவதற்காக வந்து தண்ணீர் பாலம் அருகே நிறுத்திவிட்டு கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டு சுமார் 1/2 மணி நேரம் கழித்து வந்து பார்த்த போது அ.சா.1 நிறுத்தியிருந்த இடத்தில் இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி, புகாரில் புகாரை பெற்று குற்ற எண்.306/2017 இதச பிரிவுகள் 379 ன் படி 24.09.2017 ம் தேதி மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு எழுதப்பட்டுள்ளது. மேற்படி, குறிப்பு மூலம் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**10.4)** அ.சா.ஆ.2 இருசக்கர வாகனம் அடங்கிய புகைப்படம் குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**10.5)** அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை, அ.சா.4 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது 24.09.2017 ம் தேதி மாயனூர் காவல் நிலைய குற்ற எண்.306/2017 ன் படி சட்டப்பிரிவு 379 இதச ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**10.6)** அ.சா.1 தனது இருசக்கர வாகனம், திருடுபோனது பற்றி புகார் அளித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 பிரகாஷ் அ.சா.1 ன் இருசக்கர வாகனம் திருடு போயிருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் மூலம் அ.சா.1 ன் இருசக்கர வாகனம் திருடுபோன சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

**10.7)** ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் "**நான் திருடி ஓட்டி வந்த பேசன் புரோ வண்டியை தங்களிடம் ஆஜர்படுத்தினேன்.**" என்ற பகுதி குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**10.8)** அ.சா.3 சாட்சி தியாகராஜன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், 25.09.2017 ம் தேதி காலை 11.30 மணியிருக்கும் அ.சா.3 கரூருக்கு இருசக்கர வாகனத்தில்சென்று கொண்டிருந்தபோது, போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்ததாகவும் அப்போது அ.சா.3 ன் பின்னால் ஆஜர் எதிரி ஸ்பௌண்டர் மாதிரி ஒரு வண்டியில் நெம்பர் பிளேட் இல்லாத இருசக்கர வாகனத்தில் போலிசார் வண்டி யாருடையது என்று கேட்டார்கள் வண்டியை எடுத்து வந்ததாக ஆஜர் எதிரி சொன்னார். வண்டியைப்பிடித்தற்காக போலிசார் கையொப்பம் கேட்டார்கள் போட்டேன் திருட்டு வண்டி என்று சொன்னார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அவருடையது என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அவருடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் எதிரியை போலிசார் பிடித்த வண்டியும், செல்போன்கள் காணாமல் போயிருந்தது என்று விசாரித்தார்கள் நான் பக்கத்தில் இருந்தேன் அதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அரசு தரப்புக்கு விரோதமாக எதிரி தரப்புக்கு ஆதரவாக எந்த பதிலும் குறுக்கு விசாரணையில் பெறவில்லை. அ.சா.3 தியாகராஜன் அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை வாகன சோதனையின் போது போலிசாரிடம் ஆஜர்ப்படுத்தினார் என்றும், தெளிவாகவும், நம்பும்படியும் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் சாட்சியம் எதிரிக்கும், சாட்சியத்திற்கும் முன்விரோதம் இல்லாத நிலையில் அ.சா.3 எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் இவரின் சாட்சியம் ஏற்கப்படுகிறது.

**10.9)** அ.சா.5 பாரத் தனது சாட்சியத்தில், எதிரி சிவசுப்பிரமணியம் அ.சா.5 க்குத் தெரியும். அ.சா.5 யிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில்

உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.5 உடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அ.சா.5 ன் மாப்பிள்ளை அ.சா.1 பிரபாகரன் என்பவரின் பைக் காணாமல் போய்விட்டது மாயனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். பைக்கை தேடிக்கொண்டு அ.சா.5 ம், அ.சா.3 ம் 2017 ம் வருடம் 9 வது மாதம் 25 ம் தேதி இருசக்கர வாகனத்தில் தேடிகொண்டு குளித்தலையில் கரூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது முடக்குசாலையில் போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது சிவசுப்ரமணியனை விசாரித்த போது தண்ணீர் பாலத்தில் இருந்து எடுத்துவந்து விட்டதாகவும், போலிசார் விசாரித்த போது செல்போன் கடையில் செல்போன் லேப்டாப் திருடியதாக ஒப்புக் கொண்டு திருடிய பொருட்களை திருக்காம்புலியூர் L & T கம்பெனி அருகே ஆற்றுப்படுகையில் குடிசையில் வைத்திருப்பதாக கூறி வண்டியை போலிசாரிடம் ஆஜர் படுத்தினார். அ.சா.5 யிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டியை தான் எதிரி போலிசாரிடம் ஆஜர் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையில், அ.சா.5 முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் எனது மாப்பிள்ளை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அ.சா.5 யிடம் குறுக்கு விசாரணை அரசு தரப்புக்கு எதிராகவோ, எதிரி தரப்புக்கு ஆதரவாகவும் எந்த பதிலும் பெறவில்லை. அ.சா.5 க்கும், எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லாத நிலையில் அ.சா.5 எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதனால், அ.சா.5 ன் சாட்சியம் நம்பும்படியும், ஏற்கும்படியும் உள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5 ன் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**11**. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக அ.சா.4 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 25.09.2017 ம் தேதி காலை 10.15 மணிக்கு திருச்சி - கரூர் ரோட்டில் மணவாசி முடக்குசாலையில் சிவசுப்பிரமணியன் என்பவரிடமிருந்து பாரத், தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் முகமதுஜாபர் என்பவரால் பதிவு எண் இல்லாத கருப்பு நிற Hero Passion Pro இருசக்கர வாகனம் ஒன்று

கைப்பபற்றப்பட்டதாக உள்ளது. மேற்படி, கைப்பற்றுதல் மகசரிலிருந்து எதிரியை மேற்படி இருசக்கர வாகனத்துடன் உதவி ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. திருடுபோன இருசக்கர வாகனம் எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனால், எதிரி தான் திருடிய நபர் ஆவார். அல்லது திருட்டுப்பொருளை தெரிந்தே வாங்கிய நபர் ஆவார் என்று இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. எதிரி இவ்வழக்கின் சான்று பொருட்களை ஆஜர் செய்வதால் எதிரி தான் அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை திருடியுள்ளார் என்று சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரி இதச பிரிவு 379 ன் படி குற்றவாளி என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) வழக்கு காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது பொய் வழக்கு என்றும், சாட்சிகளை ஏற்க கூடாது என்றும், புகாரில், எதிரியின் பெயரோ, அடையாளம் கண்டோ புகார் கொடுக்கப்படவில்லை. அதனால், எதிரி மீது முன் விரோதம் கொண்டு புகார் கொடுத்ததாக எடுத்துக் கொள்ள முடியாது. காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் எதிரியிடமிருந்து வழக்கு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதால் வழக்கு பதிவு செய்ய ஏற்பட்ட காலதாமதம் அரசு தரப்பு வழக்கை பாதிக்கவில்லை என்றும், எதிரி தரப்பு மேற்படி வாதம் ஏற்புடையதல்ல என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13)** அ.சா.ஆ.6 பார்வை மகசர் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 03 கி.மீ தென்மேற்கில் அமைந்துள்ளது. சம்பவயிடமானது கரூர் – திருச்சி மெயின் ரோடு அருகில் சம்பவயிடம் காட்டப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது திருச்சி – கரூர் ரோடு அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவயிடத்திற்கு செல்லாமல் அங்குள்ள அம்சங்களை வரைபடமாக வரைய முடியாது. அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

**14)** அ.சா.6 திரு.முகமதுஜாபர் மாநகர குற்றப்பிரிவு காவல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** அ.சா.ஆ.10 படிவம் 91 அ.சா.4 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது பதிவு எண் இல்லாத கருப்பு நிற Hero Passion Pro இருசக்கர வாகனம் ஒன்று உள்ளது நீதிமன்றத்தில் குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற R.P.No.58/2017 ன் படி அதன் உரிமையாளரான அ.சா.1 பிரபாகரன் Crlmp.No.4590/2017, 20.11.2017 ம் தேதியிட்ட உத்தரவின் படி இடைக்கால பராமரிப்பில் பெற்றுச் சென்றுள்ளார்.

**16)** எதிரி மீது சட்டப்பிரிவு 379 இதசவின் படியான எடுத்துரைக்கப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு அளிக்கக்கூடிய தண்டனை பற்றி எதிரியிடம் குவிமுச பிரிவு 255(2) BNSS 278(2) ன் படி வினவிய போது எதிரி கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார்.

**" எனக்கு இரண்டு குழந்தைகள் படிக்கிறார்கள் அவர்களின் வாழ்க்கையை பார்க்க வேண்டும் மன்னித்து விடுதலை செய்யவும்"** எதிரிக்கு மேற்படி கூற்றை பரிசிலினை செய்து எதிரிக்கு குறைந்தபட்ச அபராதம் மட்டும் தண்டனை வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக எதிரி இதச பிரிவு 379 ன் படி குற்றவாளி என்று முடிவு செய்து எதிரிக்கு மூன்று மாதம் சாதாராண தண்டனை விதித்தும், மேலும் ரூ.2,000/- அபாரதம் விதித்தும், கட்டத்தவறினால் இரண்டு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு 248(2) மற்றும் சட்டப்பிரிவு 272(2) BNSS ன்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி கடந்த 25.09.2017 முதல் 09.11.2017 வரை மற்றும் 29.10.2025 முதல் தற்பொழுது வரை சிறையில் இருந்த 271 நாட்களை கு.வி.மு.ச.பிரிவு 428 மற்றும் சட்டப்பிரிவு 468 BNSS ன் படி தண்டனை நாட்களாக கருதி கழிக்க உத்திரவிடப்படுகிறது. எதிரி அபாரத்தொகை செலுத்தியபிறகு பிணைமுறி ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

குளித்தலை JM 2 RP NO. 58/2017 ல் கைப்பற்றப்பட்டு, இந்நீதிமன்ற RP NO. 69/2021 ல் பெறப்பட்ட பதிவு எண் இல்லாத கருப்பு நிற Hero Passion Pro இருசக்கர வாகனத்தை அ.சா.1 பிரபாகரன் குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்ற R.P.No.58/2017 ன் படி Crlmp.No.4590/2017, 20.11.2017 ன் படி அதன் உரிமையாளரான அ.சா.1 பிரபாகரன் இடைக்கால பராமரிப்பில் பெற்றுச்

சென்றுள்ளார் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத நிலையில் மேற்படி பொருட்களை அ.சா.1 பிரபாகரன் நிரந்தரமாக வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. அ.சா.1 சொத்துக்காக எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத நிலையில் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 12 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.16 04:45:21 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>**

| **சாட்சிகளின் எண்ணிக்கை** | **சாட்சிகளின் பெயர்** | **விளக்கம்** |
|---|---|---|
| அ.சா.1 | பிரபாகரன் | புகார்தாரர் |
| அ.சா.2 | பிரகாஷ் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | தியாகராஜன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | திரு.முகமது ஜாபர் | புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.5 | பாரத் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| **சான்றாவணங்களின் எண்ணிக்கை** | **தேதி** | **சான்றாவணம்** | **நிரூபித்தவர் /சான்றளித்தவர்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.09.2017 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 26.09.2017 | இருசக்கர வாகனம் அடங்கிய மூன்று புகைப்படம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள 2 வது | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| | | சாட்சி கையொப்பம் | |
| அ.சா.ஆ.4 | 26.09.2017 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 26.09.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 25.01.2019 | பார்வை மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 25.01.2019 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | 26.09.2017 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.10 | 25.10.2017 | படிவம் – 95 | அ.சா.4 |
| அ.சா.ஆ.11 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலம் நகலில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.12 | 26.09.2017 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–இல்லை**

**எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:– இல்லை**

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.16 04:45:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**பின்சேர்க்கை:**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

**மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை  நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**